முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 20.11.2025

O.S. No. 69/2024

வா.சா-1 ஸ்ரீ முத்து ராஜன்

2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

2ம் பிரதிவாதி யாரு என்ற விவரம் தெரியுமா என்றால் எனது தங்கை ஸ்ரீதேவி குமாரியின் கணவர் ஆவார். 3 ம் பிரதி எனது தாயார் இந்திரா ஆவார். இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அப்பாவின் ஏ வகுப்பு பங்குகளை எனது தங்கையின் கணவர் மாற்றிவிட்டார். எனது அப்பாவின் ஏ வகுப்பு பங்குகளில் எ னக்கு உரிமைப்பட்ட பாகத்தை நான் கேட்டுள்ளேன். அந்த பங்கின் 34 ஏ பங்கின் மொத்த மதிப்பு எவ்வளவு என்றால் சுமார் 10 இலட்சம் இருக்கும்.

10 இலட்சம் மதிப்பு என்ற விவரத்தை எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்ற கட்டணத்தை குறைக்க வேண்டும் என்பதற்காக பங்கின் மதிப்பை பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு அந்த சிந்தனையே இல்லை. பங்கு சம்மந்தமான அலுவலகம் எங்கு உள்ளது என்றால் விவேகானந்த கல்லுரி வளாகத்தில் முகப்பில் உள்ளது. எனது தந்தை இறந்து சுமார் 10 வருடங்கள் இருக்கும் .இறந்த தேதி 19.05.2015 ஆகும்.

சுமார் 10 வருடங்கள் கால தாமதத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்ததில் தனிப்பட்ட காரணம் எதும் உள்ளதா என்றால் 5 வருடத்திற்கு முன்பாக நான்உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தேன். அந்த மனுவானது உரிய நீதிமன்றத்தில் பரிகாரம் கேட்க அறிவுறுத்தி முடித்துவைக்கப்பட்டது,

எனது அப்பாவிற்கு 3 பிள்ளைகள். நான், 2வது ஸ்ரீதேவி குமாரி, 3 வது ஸ்ரீ

கார்த்திகேயன் ஆகும். எனது அம்மாவும் அந்த பங்கிற்கு வாரிசு என்றால் சரி. இந்த வழக்கில் எனது அம்மாவை மட்டும் சேர்த்துள்ளேன். எனது தங்கையும் தம்பியும் இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரி. அவர்களை நான் வாரிசாகவே கருதவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் எனது தம்பி, தங்கைகளை கட்சி சேர்த்தால் 001.12.2015 ம் தேதி நான் பங்கை எழுதி கொடுத்த அபிடவிட் உறுதி செய்துவிடுவார்கள் என்பதற்காக அவர்களை வேண்டும் என்றே கட்சி சேர்க்காமல் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. அவர்களை கட்சி சேர்க்க தயாராக உள்ளேன்.

அவர்களை சாட்சியாக விசாரிக்கலாமா என்றால் விசாரிக்கலாம். 01.02.2015 ம் தேதி வாரிசுகளான நாங்கள் 3 பேரும் சேர்ந்து ஏழுதிய அபிடவிட்டை தன்னிச்சையாக நான் ரத்து செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் அபிடவிட் எதும் எழுதிக்கொடுக்கவில்லை. மாவட்ட சங்க பதிவாளரை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரி, நான் உயர்நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் மாவட்ட சங்க பதிவாளரை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அவசிய தரப்பினரை கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்ததக்கது என்றால் சரியல்ல.

நான் கட்டிடம் கட்டும் பொறியாளர் வேலை பார்த்து வருகிறேன். எனக்கு வருமானம் மாதம் 4 இலட்சம் ஆகும். பங்கு பரிமாற்றம் நடந்து 1 மாதத்தில் 1ம் பிரதி ஏற்று வேண்டும் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரிதியின் பைலா எனக்கு தெரியாது. 1ம் பிரதி ஏற்கவோ, மறுக்கவோ செய்யவில்லை என்றால் சட்டப்படி பங்கு பரிமாற்றம் ஏற்று கொண்டதாக கருதப்படவேண்டும் என்றால் எனக்கு தெரியாது. பங்கு பரிமாற்றத்திற்கு ஆட்சேபனை எதும் தெரிவித்தேனா என்றால் எனது அப்பா இறந்து சுமார் 2 மாதத்திற்குள் ஆட்சேபனை மனு கொடுத்தேன்.

அந்த மனுவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. உண்மையில் நான் ஆட்சேபனை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் எனாற்லும் சரியல்ல. மாவட்ட பதிவாளருக்கு பங்கு பரிமாற்றம் சம்மந்தமாக மனு எதாவது சமர்பித்தேனா என்றால் கொடுத்தேன். தேதி எனக்கு ஞாபகம் இல்லை. அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். உண்மையில் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிளேன் என்றாலும் சரியல்ல.

வா.சாஆ, 5,6 ஆட்சேபனை மனுவானது மாவட்ட பதிவாளருக்கு 25.04.2023, 23.05.2023 ம் தேதி நான் கொடுத்துள்ளேன் என்றாலும் எனது அப்பா இறந்த 2 மாதத்தில் கொடுக்கவில்லை என்றாலும் சரிதான்,. எனது தங்கை மாவட்ட நீதிமன்றத்தில் அ,ச,வழக்கு எண் 166/2022 என்ற பாக வழக்கை எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. எனது தங்கை சொத்துக்களை பங்கு கேட்டதால் அவர் மீது விரோதம் கொண்டு தங்கையின் கணவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3ம் பிரதி, 2 பிரதியின் பெயருக்கு பங்கு சம்மத கடிதம் கொடுத்து 28.05.2016 ல் மாற்றியுள்ளார் என்றால் சரி. எனது தங்கை பாக வழக்கை வாபஸ் வாங்கிவிட்டால் நான் இந்த வழக்கை சமாதானமாக முடித்து விடுவேன் என்றால் சரியல்ல. அது வேறு இது வேறு. 04.04.2021 ம் தேதி 1 ம் பிரதிக்கு கோரிக்கை அனுப்பியுள்ளேன்என்றாலும் அதன் விவரம் என்ன என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. வா.சாஆ 1 ஆவணம் நான் கொடுத்த கோரிக்கை என்றால் சரி.

அந்த ஆவணத்தில் என்ன என்றால் என்னுடைய பாகத்தை எனக்கு விட்டு கொடுக்கவில்லை என்றால் பாக வழக்கு போடுவேன் என்று 3ம்பிரதிவாதியும் அவரது

மகளும் கூறினார். அதனால் ரத்து செய்வதற்காக வா.சாஆ 1 அவணத்தை கொடுத்துள்ளேன். உண்மையில் 01.12.2015 ம் தேதி எனது அம்மாவிற்கு எனது பாகத்தை விட்டு கொடுத்த பின்பு அதில் உரிமை கோர எனக்கு அறுகதை இல்லை என்றால் சரியல்ல. 1 ம்பிரதியின் செயற்குழு 3ம் பிரதிக்கு பங்கு மாற்றி உரிமை வந்ததை அங்கீகாரம் செய்துவிட்டார்கள் என்றால் சரி.

1ம் பிரதிவாதி பைலாவை பின்பற்றி 3 ம் பிரதியின் பெயருக்கு பங்கை பெயர் மாற்றம் செய்துள்ளார் என்றாலும் அன்றைய தினத்திலிருந்த தலைவர் அதனை ஏற்று கொண்டார் என்றால் சரி. சோசைட்டி சட்டப்படி பெயர்மாற்றி 6 வருடதிற்கு பின்பு சட்டப்படி அங்கீகரிக்கட்டதாக கருதப்படும் என்றால் தெரியாது. 6 வருடத்திற்குள்ளாக நான் எதிர்ப்பு தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். 34 ஏ பங்கின் அடிப்படையில் 2 ம் பிரதி பல தேர்தல்களில் பங்கேற்றார் என்றால் சரி.

1ம் பிரதியின் சங்கத்தில் 2 ம்பிரதி Board of Directors ல் ஒரு இயக்குனர் என்றால் தெரியாது. உண்மையில் வேண்டுமென்றே இயக்குனர் என்பதை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 ம் பிரதி பொறுப்பில் உள்ளதால் இந்த பங்கு மாற்றத்தை கேள்விக்கு உட்படுத்த முடியாது என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் கால வரையறை தோசத்தால் பாதிக்கப்பட்டது. வழக்கில் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல. 2ம் பிரதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கறிவுப்பு நான் செய்யவில்லை என்றால் சரியல்ல.சரியான கட்சிக்கு வழக்கிறிவுப்பு செய்யாததால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.